# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 84 — 1973 නොවැම්බර් 02 වැනි සිකුරාදා — 1973.11.02

84 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... | ... 1149 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | ... — |


## பதவிகள் — வெற்றிடம்

**இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்**

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்கள வராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதி தாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமை வாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தி யோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத் தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரை யில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவை யானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ..

---

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த் படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

எண் : பொ. நி. 7/114

**கல்வி அமைச்சு**

பல்தொழில்நுட்ப நிலையங்களில் விரிவுரையாளர் தரம் II (வணிகம்)

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில்நுட்ப நிலையங்களில் விரிவுரையாளர் தரம் II (வணிகம்) எனும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, " செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " பல்தொழில்நுட்ப நிலையங்களில் விரிவுரையாளர், தரம் II (வணிகம்) பதவி " என அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் வகிக்காவிடின் அ. சே. சே. நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத்தின்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் உபகாரச் சம்பள உரித்தை அவர் தொடர்ந்து அனுபவிப்பார். தெரிவு செய்யப்படும் அபேட்சகர், ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாவிடின் முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை அரசாங்கத்தின் கீழ் வகிக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படின் ஒரு வருட காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய, வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040.

(**குறிப்பு.**—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 4,080—12 × 360—8,400 ஆகும்.)

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராக இருக்க வேண்டும்.

(ஆ) 23.11.1973 அன்று 26 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (1) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் வணிகம் அல்லது பொருளியல் அல்லது தொழில் நிருவாகம் அல்லது பொது நிருவாகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—அபேட்சகர்கள் பின்வருவனவற்றுள் குறைந்தது நான்கு பாடங்களிலேனும் பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் :—

(1) பொருளியல் (பிரயோக பொருளியலும் பொருளியல் வரலாறும் உட்பட),
(2) கணக்கியல்,
(3) புள்ளி விவரவியல்,
(4) பொது வணிக நிதி அளவு,
(5) கணக்காய்வு,
(6) பொது நிதி,
(7) முகாமைக் கோட்பாடுகளும் பயிற்சியும்,
(8) சந்தைப்படுத்தல்,
(9) சமூகவியல்,
(10) செலவுக் கணக்காய்வியல்,
(11) பணப் பொருளியல்,
(12) தொழில் நிருவாகம்.

அல்லது

(ஆ) இலங்கை தொழினுட்பக் கல்லூரியில் வணிகத்தில் டிப்புளோமாப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) 5 வருடங்கட்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஈ) அபேட்சகர்கள் சிங்கள மொழி மூலம் போதிக்கும் தொழினுட்ப நிறுவனத்தில் நியமிக்கப்படுமிடத்து சிங்களத்தில் கற்பிக்கத்தக்க சிறந்த தொழில் அறிவையும் அல்லது தமிழ் மொழி மூலம் போதிக்கும் தொழில்நுட்ப நிறுவனத்தில் நியமிக்கப்படுமிடத்துத் தமிழில் போதிய அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும். சிங்களத்திலோ தமிழிலோ தேர்ச்சி பெறாத அபேட்சகர்கள் தேவைக் கேற்பச் சிங்களம் அல்லது தமிழில் நியமித்த தேதியிலிருந்து மூன்று வருட காலப் பகுதியும் விதிக்கப்பட்ட தரத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

**குறிப்பு.**—கல்வி அமைச்சின் கீழுள்ள தொழினுட்ப நிறுவனங்களில் எலவே சேவையிலிருக்கும் தேவையான தகைமைகளுள்ள அபேட்சகர் களுக்கும் பல்கலைக் கழகம் அல்லது அதையொத்த வேறொரு நிறுவகத்தில் கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கும் அபேட்சகர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில்நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும்பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெற்றிருக்கப்பட்டு, தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனினும், விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை இவ்வமைச்சுக்கு, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் சம்பந்தமான கடிதங்களேனும் கல்வி அமைச்சின் செயலாளருடைய விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, II(அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங் களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமைபற்றி அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆடு ஒற்றோபர் மீ 24 ந் உ.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

### கல்வி அமைச்சின் கீழுள்ள பல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் விரிவுரையாளர் தரம் II (வணிகம்)

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : திரு./திருமதி/செல்வி : ————.

2. முழுப்பெயர் : ————.

3. உத்தியோக முகவரி : ————.

4. சொந்த முகவரி : ————.

5. (அ) இலங்கையரா ? : ————.
(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? : ————.

6. பிறந்த திகதி :—வருடம் : ————, மாதம் : ————, நாள் : ————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :—
வருடம் : ————. மாதம் : ————, நாள் : ————.

8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :—

(அ) பதவி : ————.

(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? : ————.

(இ) உபகாரச் சம்பளம் உரித்துடையதா அற்றதா ? : ————.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? : ————.

(உ) திணைக்களம் : ————.

(ஊ) நிலையம்/வேலை இடம் : ————.

(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.

(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதய படி : ————.

9. கல்வித் தகைமைகள்பற்றிய விபரங்கள் (சிங்களத்தில் பெற்றுள்ள தேர்ச்சி/தமிழில் பெற்றுள்ள தராதரப் பத்திர விவரங்கள் உட்பட) :—

| | பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

10. உயர்தொழில் தகைமைகள்பற்றிய விபரங்கள் :—

| | தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| | திணைக்களம் | நிலையம்/ வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? : ————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

திகதி : ————. ————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11–128—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

**நெல் சந்தைப்படுத்தும் சபை**

உதவி அரிசி ஆலைப் பொறியியலாளர்—தரம் IV

மேற்கூறப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

விண்ணப்பதாரி தமது கல்வித் தகைமைகள், நற்சாட்சிப் பத்திரங்கள், பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் தலைவர், நெல் சந்தைப்படுத்தும் சபை, இல. 5, எலிபாங் வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு, 1973 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுதபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய மேலுறையின் இடது பக்க மூலையில் " உதவி அரிசி ஆலைப் பொறியியலாளருக்கான விண்ணப்ப மென " குறிப்பிடல் வேண்டும்.

1. **தகைமை.**—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஓர் பொறியியல் (எந்திரவியல்) பட்டதாரியாகவும் அல்லது பொறியியல் (விவசாயப்) பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

2. **வேதனம்.**—ரூபா 800—10×40—6×50—1,500 (மாதமொன்றிற்கு எல்லாமுட்பட).

3. **வயதெல்லை.**—விண்ணப்ப முடிவுத் தேதியன்று 22 க்குக் குறையாமலும் 35 க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசாங்க சேவையிலும், கூட்டுத்தாபனங்களிலும், சபைகளிலும் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

4. **பொது நிபந்தனைகள்.**—

(அ) இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தினதும் அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குத் தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் புகுத்தக்கூடிய எவையேனும் சட்டங்களினதும் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக வேண்டும்.

(இ) அரசாங்க இலாகாக்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள், தமது இலாகாவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
நெல் சந்தைப்படுத்தும் சபை.

இல. 5, எலிபாங் வீதி,
கொழும்பு 5, 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 25 ந உ.

11–139—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

**பொதுத் திறைசேரி**

*உதவிப் பணிப்பாளர் பதவி (கூட்டுத்தாபனப் பகுதி)*

*பொதுத் திறைசேரியின் கூட்டுத்தாபனப் பகுதியில் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், நிதி அமைச்சு (மத்திய விங்), அ. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியுடன் 1973, நவம்பர் மாதம் 19 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அவர் பெறக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் " உதவிப் பணிப்பாளர், கூட்டுத்தாபனப் பகுதி " எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*குறிப்பு.—விண்ணப்பப் படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டதெனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.*

*2. சம்பளமும் படிகளும்.—(அ) நிரந்தர, உபகாரச் சம்பளத் துக்குரிமையற்ற அடிப்படையில் ஆண்டுக்கு ரூபா 11,040—11×480—16,320 ரூபாவும் மணமானவர் படியும்; அல்லது*

*(ஆ) தற்காலிகச் சேவைமாற்றம் பெற்ற கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்குக் கூட்டுத்தாபனச் சம்பளம்.*

***தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரின் தகைமைக்கும் அனுபவத்துக்குமேற்ப சம்பளத் திட்டத்தில் ஏற்ற நிலையில் வைக்கப்படுவர்.***

*3. தகைமைகள்.—அபேட்சகர் ஒவ்வொருவரும்.—*

*(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவரென்பதற்கும் ;*

*(ஆ) 1973, நவம்பர் மாதம் 19 ஆந் தேதியில் 23 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் உள்ளவரென்பதற்கும் திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலெல்லை வயது பொருந்தாது).*

**கல்வித் தகைமைகள்—**

*(1) இலங்கை/இங்கிலாந்து/வேல்சுத் தத்துவம் பெற்ற கணக்காளர் கழகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி ; அல்லது*

*(2) இங்கிலாந்துச் செலவு, வேலைக் கணக்காளர் கழகத்து உறுப்பினர்.*

*பின்வரும் துறைகள் எவற்றிலும் அரசாங்கத் திணைக்களம், பெரிய கைத்தொழில் அல்லது வர்த்தக முயற்சியொன்றில் நிருவாகக் கட்டத்தில் தகைமைக்குப் பின்னர் அனுபவம் பெற்றிருத்தல் நன்மை பயப்பதாகும் ;*

*((1) நிதி நிருவாகம், பரிசீலனையும் முகாமையும் ;*

*(2) கணக்கிடல், செலவுக் கணக்கு, முகாமை முறைகள் தயாரித்தல் ;*

*(3) திட்டப் பரிசீலனையும் மதிப்பிடலும்.*

*4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) உயர் தொழிற்றகைமையும் அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமையும்பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களாயினும் சாதனங்களின் படிகளாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தலாகாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அரசாங்கச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பப் படிவங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நிதி அமைச்சு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இச் செய்திமடலின் I ஆம் பாகம் (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள ; அவற்றைப் பார்க்க.

சீ. ஏ. குறே,
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
அ. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1,
1973, ஒற்றோபர் மாதம் 24 ஆந் தேதி.

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

2. முழுப்பெயர் (பெரிய எழுத்தில்) :————.

3. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றமெதுவும் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்)

4. பிறந்த தேதி :————.
ஆண்டு :———— மாதம் :———— நாள் :————.

5. விண்ணப்ப முடிவு தேதியில் திட்டமான வயது :————.
ஆண்டுகள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————.

6. இலங்கைக் குடியா என்பது ? மரபுவழியாகவா, பதிவு வழியாகவா என்பதைக் கூறுக. ( (1) ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்க) :————.

7. பின்வருவோர் பிறந்த இடம். ((2) ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்க) :————.
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரர் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

8. (அ) பால் :————.
(ஆ) மணமானவரா, தனியானவரா, வாழ்விழந்தவரா ? :————.

9. (1) சிங்களம், (2) தமிழ், (3) ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி பெற்ற உயர்ந்த பரீட்சைகள் :————.
1.
2.
3.

10. பல்கலைக்கழக, உயர்தொழில், தொழினுட்ப தகைமைகள் :————.

(பெற்றுள்ள பட்டங்கள், சிறப்புச் சித்தி, உயர்தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப தகைமைகள் யாவற்றையும் அவற்றைப் பெற்றதேதி, வகுப்பு (எதுவுமுண்டானால்), எடுத்த பாடங்கள், கழகத்தின் பெயர் ஆகியவற்றுடன் விரிவாகக் கூறுக.)

11. இப்பொழுது வகிக்கும் பதவியும் முந்திய நியமனங்கள் எதுவுமுண்டானால் அவையும் வேலையிலமர்த்தப்பட்ட தேதி, விலகிய தேதி, கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளம் யாவும் குறிப்பிடப்படல் வேண்டும் :————.

முக்கிய குறிப்பு.—அரசாங்கத்தின் கீழ் தொழிலிலிருந்து விலகிய காரணம் 13 ஆம் கூட்டில் கூறப்படல் வேண்டும்.

| பதவி | இருந்து | வரை | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

12. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விசேட தகைமைகளை அத்துடன்/அல்லது அனுபவத்தை பெற்றிருக்கிறீரா ? அவ்வாறாயின் அவற்றில் முழு விவரங்களையும் தேதிகளுடன் கூறுக. செய்திமடல் அறிவித்தலில் விசேட தேவைகள் எவையும் குறிப்பிடப்பட்டிருந்தால் அவற்றைப் பார்க்க :————.

13. பிற விவரங்கள் எவையேனும் :————.

14. இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இதனகத்துள்ள விவரங்களுள் எவையேனும் உண்மையற்றவை அல்லது சரியற்றவையெனக் காணப்பட்டால், தேர்வுக்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கு ஆளாவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்னர் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் இழப்பீடு எதுவுமின்றித் தள்ளப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

11-95—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

### அரசகரும மொழித் திணைக்களம்

மொழிபெயர்ப்பாளர் பதவிகள் (இலக்குமொழி—தமிழ்)

அரசகரும மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் (இலக்குமொழி—தமிழ்) பதவியொன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பின்வரும் படிவ அமைவு பெருவளவாகி 23.11.1973 அன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

2. வேதன அளவு.—இப்பதவிக்குரிய திரட்டு வேதனம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,600—180 ம் 240 ம் 9,240 ரூபாவாகும். ஆண்டொன்றுக்கு 8,280 ரூபா ஏய்தப் பெறுமுன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை உண்டு.

3. சேர்வுநியதிகள்.—(i) பதவி நிரந்தரமானது. ஆனால் ஓய்வூதியமற்றதாகும். நியமிப்பு ஏற்பாட்டு நிதியத்தின் அடிப்படையிலானதாகும். இந்தப் பதவியில் நியமிக்கப்படுதல் மூன்று ஆண்டு களைக்கொண்ட தகுதிகூர் நிலைக்காலத்தின் பின்னரேயாகும். இது 09.06.69 ஆந் திகதியிட்ட 765 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் (அ), (ஆ) பிரிவுகளின் தொடர்பிலானதாகும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் குறுகிய காலத்திற்குள் பதவிக் கடமையைப் பொறுப்பேற்குமாறு வேண்டப்படுவர்.

(iii) நியமிப்புத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் பொ. க. ச. (சாதாரண நிலை) பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைதல் வேண்டும்.

(மு கு.—பொ. க. சா. (சாதாரண நிலை) பரீட்சைத் தரத்திலோ அதற்கு மேற்பட்ட தரத்திலோ சிங்கள மொழியறிவு பெற்றிருத்தல் கூடுதலான தகைமையாகக் கணிக்கப்படும்.

(iv) கடமைகளாவன :—ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் வேண்டிய அறிவு பெற்றபின் தமிழிலிருந்து சிங்களத்திற்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்த்தல், பிற திணைக்களங்களிலிருந்து வரும் தமிழ் அல்லது சிங்கள மொழி பெயர்ப்புக்களை மீள் நோக்கல், ஏனைய வழிகளில் திணைக்களத்திற்கு உதவுதல்.

4. வேண்டப்படும் தகைமைகள்.—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடைவர் என்பதற்கு தக்க சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அவர் ஒழுக்க நலமும் உடல் நலமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 23.11.1973 இல் 25 வயதுக்குக் குறையாததும் 50 க்கு மேற்படாததுமான வயதுடையவராக இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லைகள் அமைவுடையனவன்று).

(இ) (i) அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகமொன்றில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பட்டமும் தெளிந்த ஆங்கில மொழியறிவும் உடையவராகவிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) பட்டதாரித் தகை நிலை அறிவு கொண்ட தமிழ் எழுத்தாளராகவோ நூலாசிரியராகவோ இருப்பதுடன் தெளிந்த ஆங்கில மொழி அறிவுடைய அல்லது 10 வருட அனுபவமுடைய தமிழ்மொழி பெயர்ப்பாளராகவிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ii) அதியுயர் கல்விச் சான்றிதழ்.

(iii) அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள் (அரசாங்க சேவையிலுள்ளார்க்கு இது அமைவுடையதன்று).

மு. கு.—மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பமோ, விண்ணப்பஞ்சார் ஏதும் கடிதமோ அஞ்சல் வழித் தொலைந்துவிட்டதென்றோ தாமதமடைந்துவிட்டதென்றோ கூறப்படும் முறைப்பாடு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பத்தைத் தாழ்த்துவதால் விளையும் இடருக்கு விண்ணப்பகாரரே பொறுப்புடையவர். அரசாங்க சேவையிலும் யாக்கங்களின் சேவையிலுமுள்ள உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரின் திணைக்களத் தலைவரினால் அல்லது யாக்கத் தலைவரினால் விதித்த காலத்திற்கு முன்னர் பெறப்பட்டதாய்த் தாமதத்திற்கு தக்க சான்று காட்டி திணைக்களத் தலைவர் அல்லது யாக்கத் தலைவர் ஏற்றுக் கொண்டமையைச் சிபாரிசு செய்தால் மட்டுமே குறித்த நாளுக்குப் பிந்தி வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் அல்லது அவை தொடர்பான ஏனைய கடிதத் தொடர்புகள் அரசகரும மொழி அலுவல் ஆணையாளர் அ. பெ. 598, 22, நீத்வழி, கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி திணைக்களஞ்சார் உத்தியோகத்தர் எவரினதும் தனி முகவரிக்கு அனுப்பப்படலாகாது.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் கடிதம் கிடைக்கப்பெருதோர் உடனே அரசகரும மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இதன்படி ஒழுகாத விண்ணப்பகாரர் விண்ணப்பந் தொடர்பான கோரிக்கையெதனையு மிழந்தவராவர்.

9. அரசாங்க சேவையாளர் பொது நிபந்தனைகளை இவ்வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (IIஅ) இல் பார்க்க.

பீற்றர் பீ. அபேசேகரா,
அரசகரும மொழி அலுவல் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீத் வழி,
கொழும்பு 7,
1973 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 23 ஆந் திகதி.

அரசகரும மொழித் திணைக்களம்

மொழி பெயர்ப்பாளர் (இலக்கு மொழி—தமிழ்) பதவிக்கான

மாதிரி விண்ணப்பப் படிவம்

மு. கு.—விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மொழி பெயர்ப்பாளர் (இலக்கு மொழி—தமிழ்) பதவிக்கான விண்ணப்பம்" என எழுதி அதை பதிவுக் கடிதமூலமாக அரசகரும மொழி அலுவல் ஆணையாளர், 22, நீத் வழி, கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)
1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆந் திகதியில் வயது :—
ஆண்டு :————. மாதம் :————. திகதி :————.

4. சாதியம் :————.

5. விண்ணப்பகாரர் விவாகமானவரா, விவாகமாகாதவரா :————.

6. (அ) கல்வி அல்லது தொழில் தகைமை அல்லது இரண்டும் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

(ஆ) தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்பவற்றைப் பாடமாகக் கொண்டு சித்தியெய்திய அதியுயர் பரீட்சைகள் :—
தமிழ் :————.
சிங்களம் :————.
ஆங்கிலம் :————.

(இ) மொழிபெயர்ப்பு வேலையில் அனுபவம் இருந்தால் அதன் விவரங்களைக் குறிப்பிடவும் :————.

(ஈ) எழுத்துத் துறையில் அனுபவம் இருந்தால் அதன் விவரங்களையும் குறிப்பிடவும் :————.

7. (அ) பாடசாலையிலிருந்து விலகிய பின் செய்த தொழில் அல்லது பெற்ற அனுபவம் அல்லது இரண்டின் தொடர்பினுன விவரம் :————.

(ஆ) அரசாங்க சேவையிலிருந்தால் தற்போது வகிக்கும் பதவி, பெறும் வருடாந்த வேதனம் ஆகியவற்றைக் குறிப்பிடவும் :————.

8. இதற்கு முன் எந்த அரசாங்க திணைக்களத்திலும் அல்லது அரசயாக்கத்திலும் சேவையிலிருந்திருந்தால் அதிலிருந்து விலகிய காரணத்தைக் குறிப்பிடவும் :————.

9. ஏதாவது தண்டனைக்குரிய குற்றம் புரிந்திருந்தால் அல்லது நீதி மன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால் அக்குற்றமும் தண்டனையும் சம்பந்தமான விவரங்களைக் குறிப்பிடவும் :————.

10. நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ள மூவர் பெயர்களும் பதவி நிலைகளும் :—.
1.
2.
3.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் ஏவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
ஒப்பம்.

திகதி :————.

11-110—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

## இலங்கை விமானப் படை

### மருத்துவ தாதிகள் பதவி (பெண்)

இலங்கை விமானப் படைக்கு பயிற்சி பெற்ற மருத்துவ தாதிகள் (பெண்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையிற் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் ரூபா 3,864—144—ரூபா 6,456 வருடாந்தமும் (திரட்டிய சம்பளம்) ரூபா 5,736 க்கு முன் வினைத் திறமை காண் தடையும் கவனிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குக் கிடைக்கும் நலன்கள்—

(அ) சலவைச் சகாயப்படி வருடத்துக்கு ரூபா 60.00.

(ஆ) சப்பாத்து சகாயப்படி வருடத்துக்கு ரூபா 30.00 உடன்

(இ) சௌக்கியப் பகுதித் தாதிமார்களுக்குக் கொடுக்கப்படும் உடைகளுக்குச் சமமான இலவச உடைகள் கொடுக்கப்படும்.

3. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான்—

(அ) 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை நிபந்தனை கிடையாது).

(ஆ) 1949 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டபடியான மருத்துவச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வைத்திய சபையில் பயிற்றப்பட்ட தாதியாகப் பதிவு செய்யப்பட்டவராக அல்லது தாதித் தேர்வுப் பரீட்சையில் தேர்வு பெற்றவரென சௌக்கியப் பகுதியினரின் சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். தாதிப் பரீட்சை சேர்வுச் சான்றிதழுடன் மருத்துவிச்சி பரீட்சைச் சான்றிதழுமுடைய விண்ணப்பதாரிகளுக்கு முதன்மையளிக்கப்படும்.

(இ) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—மருத்துவ சட்டத்தின் 105 அத்தியாயத்தில் VII ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவிச்சிகளாகவும், பயிற்றப்பட்ட தாதியாகக் கடமையாற்றி 2 வருடகால அனுபவமுள்ளவர்களுக்கு முதன்மையளிக்கப்படும்.

4. **நியமன விதிகள்.**—பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஏற்கெனவே நிரந்தரமானதும், உபகாரச் சம்பளத்திற்கு உரித்தானதுமான அரசாங்க சேவையில் இருப்பின் அவர் தொடர்ந்தும் அவ்வுரிமைகளுக்கு உரித்துடையவராவர்.

5. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ்க் குறிப்பிடப்படும் பத்திரங்களின் பிரதிகளை மாத்திரம் இணைத்து அனுப்ப வேண்டும் (மூலங்கள் அல்ல).

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானத்திற்கு அல்லது கல்விக் கட்டளையிற் கொடுக்கப்பட்ட பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) அண்மையிற் பெற்றுள்ள இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இது அவசியமில்லை).

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழும் தொழிற்துறைச் சான்றிதழும்.

6. விண்ணப்பங்கள் சிவில் பரிபாலன உத்தியோகத்தர், இலங்கை விமானப் படைத் தலைமைக் காரியாலயம், தபாற் பெட்டி எண் 594, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 2 என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். தவிர நேர்முகமாக இப்பகுதியில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களிடம் கொடுக்கக் கூடாது.

7. ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் அப்பகுதி உயர்தர அதிகாரிகளினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

8. அரசாங்க சேவைகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுக்கு வர்த்தமானித் தொடக்கத்தின் பகுதி (I) தொகுதி (II அ) ஐக் கவனிக்கும்படி கோரப்படுகின்றீர்கள்.

**குறிப்பு.**—விண்ணப்பப் பத்திரங்களுடன் இணைத்து அனுப்பப்படும் பத்திரங்கள் யாவும் திருப்பித்தரமாட்டா. மேற்குறிப்பிட்ட தராதரங்களுக்கு அமையாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

சிவில் பரிபாலன உத்தியோகத்தர்,
இலங்கை விமானப் படை,
விமானப் படைத் தலைவருக்காக.

தலைமைக் காரியாலயம்,
இலங்கை விமானப் படை,
த. பெ. எண் 594,
கொழும்பு-2,
22.10.1973.

### மாதிரிப் படிவம்

மருத்துவ தாதிகள் பதவிக்கான விண்ணப்பம்

இலங்கை விமானப் படை

1. முழுப் பெயர் :————.
(தடித்த எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.

3. பிறந்த தேதியும் வயதும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்பட வேண்டும்)

4. தேசிய இடம் :————.
(வம்சா வழியாகவா, பதிவு காரணமாகவா என்பதைத் தெரிவிக்கவும்)

5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா விவாகமானவரானல்—
(அ) கன்னிப் பெயர் :————.

6. ஏற்கெனவே தொழில் புரிவதானல் கூறுக :————.
(அ) தற்போதைய இடம் :————.
(ஆ) தொழில் புரியும் காலம் :————.

7. படித்த பாடசாலையும் சித்தியெய்திய உயர்தரப் பரீட்சைகளும் :————.

8. தாதிப் பயிற்சி பெற்ற இடம் :————.

9. மருத்துவிச்சியாகப் பயிற்சி பெற்ற இடம் :————.
(தராதரப் பத்திரப் பிரதி இணைக்கவும்)

10. நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும் விலாசமும் :————.
(அண்மையிற் பெற்ற இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள் இணைக்கவும்).

11. இதற்கு முந்திய ஏதாவது அரசாங்க சேவைகளும் விபரங்களும் :————.

12. தாதி சேவை புரிவதற்கான பதிவிலக்கம் :————.
(தராதரப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

அரசாங்க சேவையிலிருந்து அல்லது பிற ஸ்தாபனங்களிலிருந்து வேலைத் திறமையின்மைக்காக ஓய்வு பெறவில்லையெனவும் வேலை நீக்கம் செய்யப்படவில்லையெனவும் இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் உடனடியாக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

11-58—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

**ஸ்ரீ லங்கா தரைப்படையில் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்**

இலங்கை இராணுவத்தில் விவசாய உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பக்காரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு இரண்டாவது லெப்டினன்ட் பதவியில் அமர்த்தப்பட்டு இலங்கை இராணுவப் பொது சேவைப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரருக்கு பதவிக்கேற்ப சம்பளமும் சகாயப்பணமும் பின்வருமாறு கொடுக்கப்படும் :—

இரண்டாவது லெப்டினன்ட்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 7,140 (மாதம் ஒன்றிற்கு ரூபா 595).

லெப்டினன்ட்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 7,500—5×180—ரூபா 8,400 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 635—5×15—ரூபா 700 வரை)

கப்டன்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 9,240—8×180—ரூபா 10,680 வரை (மாதம் ஒன்றிற்கு ரூபா 770—8×15—ரூபா 890 வரை)

மேஜர்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 11,400—8×240—ரூபா 13,320 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 950—8×20—ரூபா 1,110 வரை).

லெப்டினன்ட் கேர்ணல்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 15,000—7×360—ரூபா 17,520 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 1,250—7×30—ரூபா 1,460 வரை).

(ஆ) கீழ்க்காணப்படும் சகாயப்பணமும் கொடுக்கப்படும் :—

**மணமான அதிகாரிகளின் பணிக்கொடை**

மாதமொன்றிற்கு ரூபா 575 ம் ரூபா 600 க்கு குறையவும்—மாதம் ரூபா 80.00

மாதமொன்றிற்கு ரூபா 600 ம் ரூபா 625 க்கு குறையவும்—மாதம் ரூபா 82.50

மாதமொன்றிற்கு ரூபா 625 ம் ரூபா 650 க்கு குறையவும்—மாதம் ரூபா 85.00

மாதமொன்றிற்கு ரூபா 650 ம் ரூபா 675 க்கு குறையவும்—மாதம் ரூபா 87.50

மாதமொன்றிற்கு ரூபா 675 ம் ரூபா 700 க்கு குறையவும்—மாதம் ரூபா 90.00

மாதமொன்றிற்கு ரூபா 700 ம் ரூபா 725 க்கு குறையவும்—மாதம் ரூபா 92.50

மாதமொன்றிற்கு ரூபா 725 ம் ரூபா 750 க்கு குறையவும்—மாதம் ரூபா 95.00

மாதமொன்றிற்கு ரூபா 750 ம் ரூபா 775 க்கு குறையவும்—மாதம் ரூபா 97.50

மாதமொன்றிற்கு ரூபா 775 ம் அதற்குக் கூடவும்—மாதம் ரூபா 100.00

**வேறு ஏனைய பணிக்கொடைகள்**

(i) தொடக்க அணியடுக்கு பணிக்கொடை, ரூபா 1,000.

(ii) கோல அணிபேணல் பணிக்கொடை, மாதம் ரூபா 25.

(iii) வெளியில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட மணமான, மணமாகாத அதிகாரிகளுக்கு, மாதம் ஒன்றிற்கு சேவையாளர் பணிக்கொடை, மாதம் ரூபா 75.

(iv) பிரிந்திருக்கைப்படி : 1. தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகப்படாத கால வரையறைக்கு, வழமையான கடமைகளின் காரணமாக, பாசறையினுள் வசிக்கும்படி, மணமான அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 1.50. 2. அவசரகால நிலைமைக்காகவோ அல்லது விசேட கட்மைகள் காரணமாகவோ, தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகமான கால வரையறையினுள் பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா. 2.

(v) பிரயாண, அத்துடன் இணைந்த பணிக்கொடைகள் அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுபடும் படியாகும்.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காண்படும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கும்படியும், அவரவர்களின் சம்பளம், சேவைக்கு ஏற்பவும் ஆளப்படுவர்.

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதிய 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச்சட்டக் கோவையின் பிரகாரம் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 10 ம் திகதிய 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கு இணங்க காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ம் திகதிய 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக்கோவை உபகாரச் சம்பள பணிக்கொடைக் கோவைக்கும் இது சம்பந்தமாக காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

(அ) தேசிய இனம்.—விண்ணப்பகாரர்கள் ஸ்ரீ லங்கா பிரசையாயிருத்தல் வேண்டும் ;

(ஆ) வயது.—விண்ணப்பகாரர்கள் 24.11.1973 திகதியன்று 28 வயதுக்குக் கூடாதவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) கல்வித்தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும்.—விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணப்படுவற்றில் ஏதாவது ஒன்றில் தகைமையுடையவராய் இருத்தல் வேண்டும் :—

ஏதாவது ஒரு பிரசித்திபெற்ற பல்கலைக்கழகத்து விவசாயப் பட்டதாரிப் பட்டத்துடன்,

(ஈ) வைத்தியத்தகைமைகள்.—விண்ணப்பகாரர்கள் தரைப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(உ) அடையாளச் சீட்டு.—விண்ணப்பக்காரர்கள் தங்களை அறிமுகம் செய்வதற்கு தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களை வைத்திருத்தல் வேண்டும். ஆட் பதிவுத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது தபால் கந்தோர்கள் தலைமை அதிபதியினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது மோட்டார் போக்குவரத்து அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட தகுதிப் பத்திரம் இந்நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

5. விண்ணப்பங்கள் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் போன்று எழுதப்பட்டு 1973-11-24 திகதியன்று நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் இராணுவ தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தையுடைய கடிதவுறையில் " இராணுவ விவசாய உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். முடிவு தேதிக்குப்பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது . விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் தம் திணைக்களத் தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவர்களைச் சேவையில் இருந்து விடுவிக்கப்படலாம் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். தரைப்படைப் பணிக்கொடைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தம் திணைக்களத்தினால், அத்திணைக்களத் தலைவரினால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படாத இடத்து அரசாங்க பணிக்கொடை சேவைகள் தரைப்படைப் பணிக்கொடைக்குச் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவற்றின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும்—

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித்தகைமைகளையும் உயர் தொழிற் தகைமைகளையும் காட்டும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட குறைந்தபட்சம் இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள்.

8. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களில் இருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இதன்பின் இறுதித் தெரிவு, தெரிவு செய்யப்பட்டர்களில் இருந்து பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஆக்கப்பட்ட தேர்வுச்சபை ஒன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும். நேர்முகப்பரீட்சைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அவ்வாறானவை பற்றி பரீட்சைகளின் இடம், நேரம் திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச்

செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. பதவி உபகாரச் சம்பள உரித்துடையது அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் ஒரு சகாய நிதிக்குத் தமது உதவு தொகையாகத் தமது திரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தமது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படுவர். ஒரு சேவை உபகாரச் சம்பளத்தை அல்லது பணிக்கொடையை வழங்கப்படுதலைக் குறிக்கும் 1961 ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பளங்களும் பணிக்கொடைகளும் பற்றிய சட்டக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகள் ஏற்புடையனவாகா.

எம். ஏ. ஜயவீர.
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

1973-10-23

### இலங்கை இராணுவத்தில் விவசாய உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் (பரம்பரையான இலங்கைப் பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) :————.

3. முகவரி :————.

4. பிறந்த திகதி :————. 24-11-1973 திகதியன்று வயது :————. வருடம் :————. மாதம் :————நாள்.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியும்.

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகள் சம்பந்தமாக நீர் பெற்ற தனிச் சிறப்புகள் :—

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————.

9. படைக்கலந்தாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, இலங்கை பயிலுநர் சிறப்பணி, இலங்கை சாரணர் படை ஆகிய தொண்டர் நிறுவனங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரங்கள் :————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு என்ன விசேட தகைமைகள் உண்டு என்பதை குறிப்பிடுக :————.

11. இதற்குமுன் படைக்கலந்தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருப்பின் அதன் முடிவு யாதெனக் குறிப்பிடுக :————.

12. கீழ்க்காணப்படும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :————.

பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் :——

சேர்ந்த திகதி :————.

விலகிய திகதி :————.

பொது/உயர்தொழிற் கல்வி சித்தியெய்திய பரீட்சைகள் :————.

13. கீழ்க்காணப்படும் பாடசாலை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைத் தருக :————.

வேலை கொள்வோரின் பெயர் :————.

செய்த தொழில் :————.

சேவை செய்த காலம் :————. தொடக்கம் :————. வரை.

14. குணச்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரிகளும் :————.

மேலேகொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவிற் கெட்டிய வரையில் அவை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

11-109—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

### பனங்காமம் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

மூண்டுமுறிப்பு, வவுனிக்குளம், வன்னிவிளாங்குளம் ஆகிய மூன்று கிராம சேவையாளர் பகுதிகளடங்கிய பனங்காமம் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகைமைகளையுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவமுறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக, "அரசாங்க அதிபர், கச்சேரி, மன்னர்" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. இப்பதவி குறிப்பிட்ட சம்பள அளவை உடையதல்ல எனினும், நடைபெறும் ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 10.00 வீதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) வயது—விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்படாதவராகவும் 60 வயதிற்கு மேற்படாதவராகவும்;

(ஆ) சிறந்த நற்குணமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும்;

(இ) மேலே குறிப்பிட்ட பகுதியின் நிரந்தர வதிவாளராகவும்;

(ஈ) தமிழ்/ஆங்கிலத்தில் 7 ந் தரமென்றாலும் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின் வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) மிக உயர்ந்த கல்வித்தகைமைச் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தைக் குறிக்கும், அண்மையில் பெறப்பட்ட இரு நற்குணச் சான்றிதழ்கள்.

5. அரசாங்க அலுவலர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகளில் பணி புரிவோர், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோரல்லர். எனவே, அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்த மூன்று நாட்களுக்குள் கிடைக்கப் பெற்றமை அறியத்தரப்படும்.

7. இப்பதவி குறித்த முன்னைய அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் தமது விண்ணப்பத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

ச. கதிர்காமநாதன்,
மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர்.

மன்னர் கச்சேரி,
1973 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ம் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பனங்காமம் பகுதிக்குத் திடீர் மரண விசாரணையாளர் பதவி**

1. முழுப்பெயர் :————.
   (பெரிய எழுத்தில்)
2. முகவரி :————.
3. நிரந்தர வதிவிடமும் வசித்த காலமும் :————.
4. (அ) விண்ணப்ப முடிவுத் திகதியில் சரியான வயது :————.
   (ஆ) பிறந்த திகதியும் இடமும்: ————.
5. விண்ணப்பக்காரர் மணமானவரா :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. நிரந்தரத் தொழில் :————.
8. முன்னர் சேவையில் இருந்திருப்பின் அதுபற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும் பெறுமதியும் : ————.
10. கடனாளியாக இருப்பின் அதுபற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டவரா ? :————.
12. விசேட உரிமைக் கோரிக்கைகள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

11-15—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

**தேசிய சேமிப்பு வங்கி**

வெற்றிடங்கள்

இதன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள, தேசிய சேமிப்பு வங்கிப் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உதவிச் சட்ட உத்தியோகத்தர்கள்—தரம் IV**

**வேண்டப்படும் தகைமைகள் :** (அ) இலங்கை உயர் நீதிமன்ற வழக்கறிஞரும் பிரசித்த நொத்தாரிசுவும் அத்துடன் இத்துறையில் ஓயாது சிறப்பான தொழில் புரிந்து பெற்ற ஓர் ஆண்டுக்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர், மேற்குறித்த தகைமைகளோடு ஜீ. சி. ஈ. (சாதாரணதரம்) பரீட்சையில் ஒரே முறையில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அல்லது தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆகக் குறைந்தது விசேட சித்தியாவது எய்தியிருத்தல் வேண்டும்.

**வயது.**—விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் முடிவடையும் தேதியன்று, 35 ஆண்டுகளுக்கு மேற்படாத வயதினராக இருத்தல் வேண்டும்.

சம்பள வீதம்.—மாதமொன்றுக்கு ரூ. $\frac{300\text{—ரூ. } 675}{8 \times 15—10 \times 25}$

அடிப்படைச் சம்பளமும் வங்கி வீதங்களில் படிகளும். 575/- ரூபாவுக்கு மேல் போதற்குத் திறமைகாண் தடையொன்று செயற்படும்.

**எல்லாப் பதவிகளுக்கும் ஏற்புடையதான பொது நிபந்தனைகள் :**

(i) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியம் அற்றவையும் ஆகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அவரது மொத்தச் சம்பளத்தின் 6 சத வீதத்தை வங்கிச் சகாய நிதியத்திற்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்படுவார். வங்கி செலுத்தும் தொகை 9 சத வீதமாகும்.

(ii) நியமனங்களானவை, மூன்றாண்டுத் தகுதிகாண் காலத்திற்கு அமைந்தனவாக இருக்கும். அரச அல்லது கூட்டுத்தாபனத் பகுதிகளில் கணிசமான அளவுக் காலச் சேவையையுடைய எவரேனும் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், அத்தகைய விண்ணப்பதாரரின் நியமனமானது, வங்கிப் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான குறைந்த ஒரு சோதனைக் காலத்தின் மீது செய்யப்படலாம்.

(iii) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம்—

(அ) நல்லொழுக்கமானவரெனவும் உடல் தகுதியுடையவரெனவும்,

(ஆ) வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் அனுபவமும் உடையவரென்வும்,

திருத்திகரமான சான்று தருதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்களானவை, விதிக்கப்பட்டுள்ளதான அச்சிட்ட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். இப்படிவங்கள், சொந்த முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 8"×4" க்குக் குறையாத கடிதவுறையை அனுப்பி வங்கியின் ஆளணி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படவேண்டும்.

(v) ஒரு விண்ணப்பப் படிவம் அல்லது அதையொட்டிய ஒரு கடிதம் தபாற் சேவையில் இழக்கப்பட்டுவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(vi) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள்—

(அ) இலங்கையின் பகுதி எதிலும் சேவை புரிதற்கு அவர்களது உடலின் தகுதியொட்டி வைத்தியப் பரிசோதனை ஒன்றைச் செய்விக்குமாறும் ;

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கருமமொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குத் தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் புகுத்தப்படக் கூடிய எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கியொழுகுமாறும் ;

(இ) வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலும் முறையிலும் பிணைப்பணம் தருமாறும் ;

(ஈ) இலங்கைக் குடியரசிற்கு விசுவாசமாக இருப்பர் என்ற சத்தியத்தையும், இரகசியச் சத்தியம் ஒன்றையும் செய்யுமாறும்,

தேவைப்படுத்தப்படுவார்கள்.

(vii) உரிய முறையில் நிறைவுபடுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களானவை, ஆளணி உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி, "சேமிப்பகம்" கொழும்பு 3 என்ற முகவரிக்கு, 1973 நவம்பர் 23 ஆம் தேதிக்குப் பிந்தாமல் ஆளணி உத்தியோகத்தருக்குக் கிடைக்கத்தக்கதாகப் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி.

கொழும்பு-3,
1973 ம் ஆடு ஒற்றோபர் மீ 24 ந் உ.

11-124—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

எண் : பொ. நி/9/75

**கல்வி அமைச்சு**

நூலகன் III ஆம் தொகுதிப் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள நூலகன் III ஆம் தொகுதிப் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 24.11.73 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நூலகன் III ஆம் தொகுதிப் பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. நியமனம் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தனது சம்பளத்தில் 6% த்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நியமனங்கள் சாதாரணமாக 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

3. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 24.11.1973 ஆந் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) பின்வரும் இரு கல்வித் தகமைகளுள் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.:—
(அ) சி. பா. த. பத்திரம் ; அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

(iv) பின்வரும் மூன்று உயர்தொழில் தகைமைகளுள் குறைந்தபட்சம் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும் :—

(அ) இலங்கை நூலகச் சங்கத்தின் இடைமானித் தராதரப் பத்திரப் பரீட்சை ; அல்லது

(ஆ) கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றால் வழங்கப்படும் நூலகவியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் ; அல்லது

(இ) சமமான தகைமை.

(v) நூலகராக 10 வருட அல்லது கூடுதலான கால அனுபவம்.

4. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 6,600–8/180–ரூ. 8,040 ஆகும். (1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : ரூ. 3,900—8/180—5,340 ஆகும்).

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எவ் விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் இரண்டு சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை.)

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்துக்கே, அனுப்பப்பட வேண்டும். எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்துக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2, 1973 ம் ஆண்டு ஒக்தோபர் மீ 23 ந் உ.

## விண்ணப்ப மாதிரிப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)

'கல்வி அமைச்சின் கீழுள்ள நூலகன் III ஆம் தொகுதிப் பதவி

1. பெயர் (முதலெழுத்துகளுடன்) : திரு./திருமதி/செல்வி :————————.
2. முழுப்பெயர் :————————.
3. உத்தியோக முகவரி :————————.
4. சொந்த முகவரி :————————.
5. (அ) இலங்கையரா ? :————————.
   (ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :————————.
6. பிறந்த திகதி :— வருடம் :————————. மாதம் :————————. நாள் :————————.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :— வரு :————. மா :————. நா.————.
8. தற்போதய பதவி பற்றிய விபரங்கள் :—
   (அ) பதவி :————————.
   (ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? :————————.
   (இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? :————————.
   (ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :————————.
   (உ) திணைக்களம் :————————.
   (ஊ) நிலையம்/வேலை இடம் :————————.
   (எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————————.
   (ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :————————.
9. கல்வித் தகைமைகள் பற்றிய விரபங்கள் :—

| | பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

10. உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| | தராதரப் பத்திரம் | வழங்கியவர் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்வி கற்ற நிலையங்கள் :—

| | நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

12. நூலகராக பெற்றுள்ள அனுபவம் :—

| | நிலையம் | திணைக்களம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபடவேண்டியது) :—

| | திணைக்களம் | நிலையம்/வேலை இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :——————.
(அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா ? :——————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :——————.

இவ்வண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

——————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :——————.

11–126—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உத்தேசித்திருக்கும் நேபொட கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இத்தகொட, பஹலநேபொட, தெவுவன, பெலபிட்டியாகொட எனும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள நேபொட கிராம சபைப் பிரதேசத்திற்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973, டிசம்பர் 3 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியதாக, "அரசாங்க அதிபர், கச்சேரி களுத்துறை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவிக்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கு ரூபா 10/- வீதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 30 வயதுக்குக் கீழ்ப்படாததும் 60 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும் ;

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும் ;

(ஈ) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8 ந் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருட சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூராட்சி சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர். எனவே, அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பி. ஜீ. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை.
1973, ஒக்டோபர் மாதம் 15 ந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உத்தேசித்திருக்கும் நேபொட கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் பெரிய எழுத்துக்களில் : ——————.
(குடும்பப் பெயருடன்)

2. முகவரி :——————.

3. நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :——————.

4. (i) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :——————.
(ii) பிறப்பிடமும், திகதியும் :——————.

5. மணமானவரா அல்லது தனி நபரா ? :——————.

6. கல்வித் தகைமைகள் :——————.

7. இப்பொழுது செய்யும் தொழில் :——————.

8. இதற்குமுன் தொழில் செய்தீர்களா ? :——————
இருப்பின் அதுபற்றிய விபரங்கள் :——————.

9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும், பெறுமதியும் விபரங்களுடன் :——————.

10. விண்ணப்பதாரர் கடனாளியா ? அப்படியாயின் அதுபற்றிய விபரங்கள் :——————.

11. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ? அப்படியாயின், அதுபற்றிய விபரங்கள் :——————.

12. விசேட உரிமைக் கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :——————.

——————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :——————.

11-69—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், தொடம்கொட கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், புஹாம்புகொட, எலதுவ, தொடம்கொட மேற்கு, தொடங்கொட கிழக்கு, நேஹின்ன, துடுகல எனும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் தொடம்கொட கிராம சபை பிரதேசத்திற்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973, டிசம்பர் 3 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியதாக, “அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவிக்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கு ரூபா 10/- வீதம் வழங்கப்படும்.

3. **தகைமைகள்.**—தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 30 வயதுக்குக் கீழ்ப்படாததும் 60 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும் ;

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும் ;

(ஈ) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8 ந் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூராட்சி சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர். எனவே, அவர்களுடைய விணைப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பீ. ஜீ. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை,
1973, ஒக்டோபர் மாதம் 15 ந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், தொடம்கொட கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் பெரிய எழுத்துக்களில் : ————.
(குடும்பப் பெயருடன்)
2. முகவரி :————.
3. நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :————.
4. (i) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :————.
(ii) பிறப்பிடமும், திகதியும் :————.
5. மணமானவரா அல்லது தனி நபரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. இப்பொழுது செய்யும் தொழில் :————.
8. இதற்குமுன் தொழில் செய்தீர்களா ? :————
இருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும், பெறுமதியும் விபரங்களுடன் :————.
10. விண்ணப்பதாரர் கடனுளியா ? அப்படியாயின் அதுபற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ? அப்படியாயின், அதுபற்றிய விபரங்கள் :————.
12. விசேட உரிமைக் கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.

————,
திகதி :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11-70—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், போம்புவலைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், போம்புவலை, கொஹொலான, பொலொஸ்ஸகம, கமகொட, சேருவிட்ட, ரெமுனகொட எனும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் போம்புவலைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 டிசம்பர் 3 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியதாக, “அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவிக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கு ரூபா 10/- வீதம் வழங்கப்படும்.

3. **தகைமைகள்.**—தாம் கீழ்க்காணும் தகைமைகளுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 30 வயதிற்கு கீழ்ப்படாததும் 60 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும் ;

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும் ;

(ஈ) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8-ந் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூராட்சி சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர். எனவே, அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

பீ. ஜீ. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை,
1973, ஒக்டோபர் மீ 15 ந் வ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், போம்புவலைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் பெரிய எழுத்துக்களில் : ————.
(குடும்பப் பெயருடன்)
2. முகவரி :————.
3. நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :————.
4. (i) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :————.
(ii) பிறப்பிடமும், திகதியும் :————.
5. மணமானவரா அல்லது தனி நபரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. இப்பொழுது செய்யும் தொழில் :————.
8. இதற்கு முன் தொழில் செய்தீர்களா ? :————.
இருப்பின், அது பற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும், பெறுமதியும் விபரங்களுடன் :————.
10. விண்ணப்பதாரர் கடனுளியா ? அப்படியாயின் அதுபற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரர் நீதி மன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ? அப்படியாயின், அது பற்றிய விபரங்கள் :————.
12. விசேட உரிமைக் கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.

————.
திகதி :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11-68—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

HM/B/72/85

**ஆயுள்வேத திணைக்களம்**

பணிப்பாளர் பதவி, ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகம், நாவின்னை

நாவின்னையில் உள்ள ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு-1 என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 23.11.1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 30.11.1973.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புதற்குக் கடைசி நாட்கள் வரை தாமதிப்பவர்கள் அதனால் ஏற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள வேட்பாளர்கள் விரும்பினால் தாம் வதியும் நாட்டிலுள்ள அல்லது அதற்கண்மை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின், அலுவலகத்தில், சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள், சேவைக்கு உடற்தகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, அங்கீகாரம் பெற்ற மருத்துவத் தொழில் புரிவோரால் சோதிக்கப்படுதற்கு, அவர்கள் பிரசன்னமாகுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு, வருவதற்கு ஏற்படும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :—

(i) பதவி தற்காலிகமானது, அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் வேட்பாளருக்குத் தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில் புரியும் உரிமை இருக்கமாட்டாது.

3. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 18,840—600 × 2—20,040. 1.10.69 க்கு முன்னர் இப்பதவிக்கான இணையொத்த அடிப்படைச் சம்பள விகிதம் ஆண்டொன்றுக்கு ரூபா 15,600—600 × 2—ரூபா 16,800.

4. வேண்டப்படும் கல்வியினதும் மற்றவற்றினதும் தகைமைகள்—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமும் நல்ல உடற்சுகமும் பெற்றிருத்தல் ;

(ஆ) 2.11.1973 ஆம் திகதியன்று 35 வயதுக்குக் குறையாத 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் (அரச சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடைத்தன்று) ;

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆயுள்வேதக் கல்லூரியின் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு டிப்ளோமா அல்லது இரசாயனவியல், விலங்கியல் அல்லது தாவரவியல் அங்கீகாரம் பெற்ற ஒரு பல்கலைக்கழகத்தின் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் ;

(ii) ஒரு சிறப்புப் பட்டம் அல்லது பிராசீன பண்டித தரத்தில் சமஸ்கிருத மொழி அறிவு பெற்றிருத்தல் ;

(iii) ஆயுள்வேத ஆராய்ச்சிக்கு அவர் தலைசிறந்த பணியாற்றியிருத்தல் ;

(iv) பரந்த நிருவாக அனுபவம் பெற்றிருத்தல்.

குறிப்பு.—அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆயுள்வேத நிறுவகத்தில் விரிவுரையாளராகவோ அல்லது வைத்தியராகவோ 15 வருடங்களுக்குக் குறையாத அல்லது இரு துறைகளிலும் சேர்த்து 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றுள்ள வேட்பாளர்களுக்கு முன்னிடம் தரப்படும்.

5. பின்வரும் பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கேட்கப்படும்போது சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) பட்டப்படிப்பு அல்லது ஆகக்கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமை சான்றிதழ் அல்லது இவை இரண்டும்,

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்துள்ள மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

குறிப்பு.—(i) பத்திரங்களோ அல்லது பத்திரங்களது படிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படக்கூடாது.

(ii) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் உள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர் ஊடாக அனுப்பப் படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்படவேண்டுமே தவிர மற்றெந்த உத்தியோகத்தருக்கும் அல்ல.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (II அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகிறது.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
20.10.73.

இல :——————.
(அலுவலக பாவிப்புக்கு மாத்திரம்)

**சுகாதார அமைச்சு**

விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

————பதவி

———— திணைக்களம்.

2. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

3. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்க வேண்டும்)

4 பிறந்த தேதி :————.
வருடம் :————. மாதம் :————. திகதி :————.

5. உள்நாட்டு விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியில் சரியான வயது :————.

வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :

6. நீர் ஓர் இலங்கைப் பிரஜையா ? வம்சாவழியினாலா அல்லது பதிவினாலா என்பதைக் குறிப்பிடுக :————.
(தயவுகூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க.)

7. பிறந்த இடம்—(தயவு கூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க) :—

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) தந்தை :————.

(இ) தந்தை வழிப்பாட்டன் :————.

(ஈ) தந்தைவழிப் பூட்டன் :————.

8. (அ) பால் :————

(ஆ) திருமணமானவர், தனியாளர். தாரமிழந்தவர் :
————.

9. பின்வருவனவற்றில் சித்தி எய்திய உயர் பரீட்சைகள் :—

(அ) சிங்களம் (ஆ) தமிழ் (இ) ஆங்கிலம்

(1)

(2)

(3)

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிறதாபன தாபனங்கள் ஆதியன :———.

| பொதுக் கல்வி | | உயர் தொழிற் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் வரை | ஸ்தாபனம் | தொடக்கம் வரை |
| 1. ———. | | 1. ———. | |
| 2 ———. | | 2 ———. | |
| 3. ———. | | 3. ———. | |
| 4. ———. | | 4. ———. | |
| 5. ———. | | 5. ———. | |

11. விளையாட்டுக்களில் பெற்ற சிறப்புக்களும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் :———.

12. (அ) நீர் பணமுடை எதுவும் இல்லாதவரா ? முடை இருப்பின் எவ்வளவுக்கு ? :———.

(ஆ) நீதிமன்றம் ஒன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ் சாட்டப்பட்டவரா ? அவ்வாருயின் திகதி, வழக்கு இலக்கம் ஆதியவற்ருேடு முழு விபரங்களையும் தருக :———.

13. உயர்கல்வி, உயர்தொழில், தொழில் நுட்பத் தகைமைகள் (பட்டங்கள், சிறப்புக்கள், உயர்தொழில், அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் அவை, பாடங்கள், நிலையங்களின் பெயர்கள் ஆகிய விபரங்களோடு தருக) :———.

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் ஏதுமிருப்பின் அதுவும் (தொழிலில் சேர்ந்த, விலகிய திகதிகளும் பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படுதல் வேண்டும்.) :———.

| பதவி | தொடக்கம் வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|
| 1. ———. | | |
| 2. ———. | | |
| 3. ———. | | |
| 4. ———. | | |
| 5. ———. | | |
| 6. ———. | | |
| 7. ———. | | |
| 8. ———. | | |

முக்கியம்.—அரசாங்கத் தொழிலைவிட்டு விலகிய காரணத்தை இதன் கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்.

15. சிறப்புத் தகைமைகள் : அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டும் உடையவரா ? அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவைகளைப் பார்க்க :———.

16. மேலும் விபரங்கள் ஏதுமிருப்பின் :———.

17. இந்த விண்ணப்பத்தில் என்னுல் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன் கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுதற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

**குறிப்புகள்.**—(1) பதிவு காரணமாக இலங்கைப் பிரஜையாயின் தொடர் எண்ணையும் பிரஜாவுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வைவிட (ஆ) அல்லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

வேட்பாளர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

திணைக்களத் தலைவரின் பெயரும்
பதவிப் பெயரும்.

திகதி :———.

11-78—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

**தற்காலிக களஞ்சியப் பொறுப்பாளர், தரம் III ற்கான பதவிகள்**

சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற் தற்காலிக களஞ்சியப் பொறுப்பாளர் தரம் III ற்கான பதவிகட்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் உள்ளடக்கத்தைக் கொண்ட படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973 நவெம்பர் 20 ந் தேதியன்ருே அதன் முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம், ஆண்டொன்றுக்கு ரூபா 2,910—90×17—ரூபா 4,440 ஆகும். வினைத்திறமை காண் தடை ரூபா 3,810 ற்கு முன்பாகும்.

3. **நியமன நியதிகள்:**—

(1) பதவி தற்காலிகமானது.

(2) தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர், அரசாங்க சேவைச் சகாய நிதிக்குதவுமாறு வேண்டப்படுவார்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு வேட்பாளரும், தான்—

(அ) சிறந்த குணநலமும், உடனலமுள்ளவரெனவும்,

(ஆ) 1973 நவம்பர் 20 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும் 45 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இவ்வயதெல்லை ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடையதன்று),

(இ) சிரேஷ்ட தராதரப்பத்திரமோ, அன்றி, சிங்களம்/தமிழ் எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் (இவற்றுட் கணக்குப் பதிவில் ஒரு பாடமாயிருத்தல் வேண்டும்) இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிப் பெறப்பட்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திரமோ (சாதாரணம்) அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சையிற் சித்தியோ பெற்றுள்ளாரெனவும்,

(ஈ) ஓர் அரசாங்க திணைக்களத்திலோ, அன்றி, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலோ, களஞ்சியப் பொறுப்பாளராகக் குறைந்தது 3 வருடம் கடமையாற்றிய அனுபவம் பெற்றுள்ளாரெனவும் சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் படிகளை இணைத்தல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(ii) மிகவுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(iii) அண்மையிற் பெற்ற மூன்று குணநலச் சான்றிதழ்கள். (இவற்றின் படிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா)

6. விண்ணப்பகாரர் அரசாங்கத்தில் அல்லது உள்ளூர் ஆட்சி மன்றங்களில் சேவை செய்பவர்களாயிருந்தால் அவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது சொந்தச் செலவில் கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோரப்படுவர்.

8. விண்ணப்பங்களிற் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதேனும் பிழையானவை எனக் காணப்படின் விண்ணப்பகாரர், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் உரியவராவர்.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் (II அ) ம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை),
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ஒற்றோபர் 4.

**தற்காலிகக் களஞ்சியப் பொறுப்பாளர் தரம் III ற்கான பதவிகள்**

**கவனிக்கவும்.**—("தற்காலிகக் களஞ்சியப் பொறுப்பாளர், தரம் III ற்கான பதவிகள்" என்ற வாசகம் விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டுப் பணிப்பாளர், சிறு கைத்தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலிலனுப்பப்படல் வேண்டும்)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.

4. நாட்டினம் (சாதியம்) :————.

5. விவாகமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகள்/தொழிற்றகைமைகள் அல்லது இவ்விரண்டும் :————.
(சான்றழ்களின் படிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. கல்விக் கூடத்தைவிட்டு விலகியதிலிருந்து பெற்ற தொழில்கள், பயிற்சி நெறிகள், அல்லது இவையிரண்டும் : ————.

8. முன்பு ஓர் அரசாங்கத் திணைக்களத்திலோ, அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ தொழிலிலமர்த்தப்பட்டிருந்தீரா எனவும் அப்படியாயின் அதைவிட்டு விலகிய காரணங்களையும் குறிப்பிடுக :————.

9. எப்பொழுதாவது நீதிமன்றமெதிலும், குற்றவியற்றவறெதற்காகவேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீராவெனவும், அப்படியாயின் அக் குற்றத்தின் விபரங்களையும், பெற்ற தண்டனையையும் குறிப்பிடுக :————.

10. குணநலச் சான்றிதழ்கள் பெறப்பட்ட இருவரது பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

11-75—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

✓

**இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி**

புகையிரத முகவர் பதவி (வெளியிடங்கள்) கெப்பிட்டிப்பொல

இத்திணைக்களத்தில் புகையிரத முகவர் (வெளியிடங்கள்) கெப்பிட்டிப்பொல பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகக் குறைந்த தாகாக ரூபா 160/- வழங்கப்படும்.

**இம் முகவர் நிலையம் அமைந்திருக்கும் சுற்றுடலில் வசிக்கும் அல்லது கூறப்பட்ட அச் சுற்றுடலில் உரிமையளித்த நலன்களைக் கொண்டிருக்கும்** ஆண்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்திலன்று 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியும், எண்கணிதம் அல்லது **கணிதம் அல்லது வர்த்தக கணிதமும்** உட்பட குறைந்தது ஆறு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு-10 என்னும் முகவரியிற் பெறக்கூடியதாகவுள்ள விண்ணப்பப்படிவங்களில் நிரப்பப்பட்டு 20.11.1973 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேற்கூறப்பட்ட முகாமையாளரின் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களுக்காகிய கோரிக்கைகள் யாவும் முத்திரை இடப்படாததும், சொந்த முகவரியிடப்பட்டதுமான ஒரு கடிதவுறை (9"×4") யுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இத்தகைய கோரிக்கைகளைக் கொண்டிருக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "புகையிரத முகவர் (வெளியிடங்கள்) கெப்பிட்டிப்பொல பதவிக்காகிய விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் தேவைப்பட்ட விபரங்களைக் கூறப்பட்ட பொது முகாமையாளரது அலுவலகத்திலோ அல்லது அப் பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களிற் காணப்படும் அறிவித்தல்கள் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

வி. ரி. நவரட்ன,
பொதுமுகாமையாளர்,
இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி.

11-97/1—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

✓

**இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி**

புகையிரத முகவர் பதவி (போக்குவரத்து) ஹீல்ஓயா

இத் திணைக்களத்தில் புகையிரத முகவர் (போக்குவரவு) ஹீல்ஓயா பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகக் குறைந்த தரகாக ரூபா 160/- வழங்கப்படும். இந் நிலையம் பிரதான இருப்புப் பாதையின் பண்டாரவளை புகைவண்டி நிலையத்திற்கும் அல்லை புகையிரத நிலையத்திற்குமிடையில் அமைந்துள்ளது.

**இம் முகவர் நிலையம் அமைந்திருக்கும் சுற்றுடலில் வசிக்கும் அல்லது கூறப்பட்ட அச் சுற்றுடலில் உரிமையளித்த நலன்களைக் கொண்டிருக்கும்** ஆண்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்தன்று 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியும், எண்கணிதம், அல்லது கணிதம் அல்லது வர்த்தக கணிதமும் உட்பட குறைந்தது ஆறு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு-10 என்னும் முகவரியிற் பெறக்கூடியதாகவுள்ள விண்ணப்பப்படிவங்களில் நிரப்பப்பட்டு 20.11.1973 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேற்கூறப்பட்ட முகாமையாளரின் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களுக்காகிய கோரிக்கைகள் யாவும் முத்திரை இடப்படாததும், சொந்த முகவரியிடப்பட்டதுமான ஒரு கடிதவுறை (9"×4") யுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இத்தகைய கோரிக்கைகளைக் கொண்டிருக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "புகையிரத முகவர் (போக்குவரவு) ஹீல்ஓயா பதவிக்காகிய விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும் தேவைப்பட்ட விபரங்களைக் கூறப்பட்ட பொது முகாமையாளரது அலுவலகத்திலோ அல்லது அப் பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களிற் காணப்படும் அறிவித்தல்கள் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

வி. ரி. நவரட்ன,
பொதுமுகாமையாளர்,
இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி.

11-97/2—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

பொல்கொல்லே, கூட்டுறவுக் கல்லூரியில்

சட்ட விரிவுரையாளர் பதவி

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொல்கொல்லே, கூட்டுறவுக் கல்லூரியில் சட்ட விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்டு, " செயலாளர், வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு, த. பெ. இல. 560, கொழும்பு 2 " என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 22, நொவெம்பர் 1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 29, நொவெம்பர் 1973.

**குறிப்பு.**—(1) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக் கமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறி விட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குறைபாடு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள ஸ்ரீலங்காவின் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா குடியரசு உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நல முடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப் படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்யும், பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்று பவரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காய கட்டணத்தையும் ஸ்ரீலங்காவுக்குப் பயணம் செய்வதற்காய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **ஒப்பந்த நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(1) இப்பதவி நிரந்தரமானது. இந்நியமனம் சகாய நிதி அடிப்படையில் செய்யப்படும். நியமனம் பெறுபவர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் சம்பளத்தின் 6 வீதத்தினை உதவு தொகையாக அளிக்க வேண்டும். அரசாங்க உதவு தொகை அவருடைய திரட்டிய சம்பளத்தின் 9 வீதமாகும். ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஒய்வூதியமுடையதுமான பதவி களை வகிக்கும் அபேட்சகர் ஒய்வூதிய உரிமைகளைத் தொடர்ந்து பெறுவர்.

(2) (அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருட காலத் திற்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள். அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதிற் கடமையாற்று வதற்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) அரச சேவையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் முதலில் ஒரு வருட காலத்திற்குப் பதிற் கடமையாற்றும் தரத்தில் வைக்கப்படுவதுடன் உத்தியோகத்தர் தகுதியானவரெனக் கருதப்பட்டால் அதன் பின் உறுதிப்படுத்தப்படுவார். பதிற் கடமையாற்றும் காலத்தின் போது அவர் தகுதியற்றவரெனக் கருதப்பட்டால் அவரது நிலையான பதவிக்கு அவர் திருப்பி மாற்றப்படுவார்.

3. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவு பின்வருமாறுரும் :—

ரூபா 7,800 இல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 ஐக் கொண்ட 9 வருட ஏற்றங்களால் ரூபா 11,040 வரை உயரும். (இச்சம்பள அளவு 1.10.69 க்கு முன்பு இருந்த அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 5,160—360 ரூபா 8,400 க்குச் சமமானதாகும்).

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 22.11.1973 இல் 25 வயதுக்குட்படாமலும் 40 க்கு மேற் படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்).

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின், சட்டத்தில் பெற்றுள்ள பட்டத்தினை அல்லது சட்டத்தினை ஒரு பாடமாகக் கொண்ட பட்டத்தினை உடையவராயிருத்தல் வேண்டும் அல்லது சட்டத்தினை ஒரு பாடமாகக் கொண்டு சமூகவியலில் பெற்றுள்ள பட்டத்தினை உடையவராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டமும் கற்பித்தல் அனுபவமுமுடையவர்களுக்கு விசேட கவனஞ் செலுத்தப்படும்.

(ஈ) சிங்கள மொழியிலும் ஆங்கில மொழியிலும் விரிவுரையாற்றுந் திறமை.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண் டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கியம்.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிர மாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு—இவற்றிலொன்று பாடப் பணிப் பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமைகள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**பின்குறிப்பு.**—(1) ஒரு வித சாதனங்களும் அல்லது சாதனங்களின் பிரதிகளும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப் பட்டிருத்தல் ஆகாது.

(2) சாதனங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டாது.

6. அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்கள அல்லது அரச கூட்டுத்தாபனத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும், செயலாளர், வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்புதல் ஆகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் (II அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. எல்லா விண்ணப்பப் பத்திரங்களும் கிடைத்ததாக அறிவிக்கப்படும். விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுள் விண்ணப்பப் பத்திரம் கிடைக்கப்பட்டதாக அறி வித்தல் எதும் பெற்றுக் கொள்ளாவிடின் அதனை உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

ஜயந்த கலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு,
த. பெ. இல. 560,
330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1973 ஒக்டோபர் மீ 23 ந வ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(ஒரு வித சாதனங்களும் சாதனங்களின் பிரதிகளும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் ஆகாது).

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

**சட்ட விரிவுரையாளர் பதவி**

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) :————.

2. முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றமேற்படின் உடனடியாக அறிவித்தல் வேண்டும்) :————.

3. (அ) பிறந்த திகதி :—
வருடம்........ மாதம்........ நாட்கள்........

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்காய கடைசித் திகதி யன்று சரியான வயது :—
வருடம்........ மாதம்........ நாட்கள்........

4. நீர் இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்யப்பட்டவரா அல்லது வம்சாவழியினரா ? :————.
(பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.
(விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயிருப்பின் (அ) என்பதுடன் (ஆ) என்பதும் அல்லது (இ), (ஈ) இரண்டுமே நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயில்லாதிருப்பின், (அ) என்பதுடன் (ஆ) உம் (இ) உம் அல்லது (இ) உம் (ஈ) உம் நிரப்பப்படல் வேண்டும்).

6. (அ) பால் :————.
(ஆ) விவாகஞ் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :—
(1) சிங்களம் :————.
(2) தமிழ் :————.
(3) ஆங்கிலம் :————.

8. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள் அல்லது கல்லூரிகளும் வேறு நிலையங்களும் :—.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |

9. உடற் பயிற்சி விளையாட்டுக்கள் சம்பந்தமாகப் பெறப்பட்ட ஏதேனும் தனிச் சிறப்புக்களினதும் விளையாட்டுத் துறையில் வகித்துள்ள ஏதேனும் பொறுப்பு வாய்ந்த பதவிகளினதும் விபரங்கள் :————.

10. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எந்த அளவுக்கு ? :————.

11. சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் குற்றத்திற்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின், வழக்கின் திகதி, இலக்கம் என்பவற்றுடன் அது பற்றிய முழு விபரங்களையுந் தருக :————.

12. கல்வித் தகைமைகளும் உயர்தொழிற் தகைமைகளும் :————.
(பெறப்பட்ட சகல பட்டங்கள், விசேட சித்திகள், உயர்தொழில் தகைமைகள் என்பன பற்றிய விபரங்கள், அவற்றின் திகதிகள், இருப்பதாயின் வகுப்புகள், எடுத்துள்ள பாடங்கள், நிலையங்களின் பெயர்கள்).

13. தற்போதைய உத்தியோகமும் முன்னைய உத்தியோகமும்:————.
(அத்தகைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியும். விட்டு விலகிய திகதியும், கடைசி வருடாந்த சம்பளமும்).

| | பதவிப் பெயர் | தொடக்கம் | வரை | வருடாந்த சம்பளம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

**பின்குறிப்பு.**—கீழ்வரும் நிரல் 15 இல், அரசாங்கத்தின் கீழுள்ள ஏதேனும் சேவையினின்றும் நிறுத்தப்பட்டதற்காய காரணங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள் :————.
(விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் அல்லது அனுபவத்தினையும் நீர் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின் அவை பற்றிய முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விசேட தகைமைகளுக்கு வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்க).

15. வேறு ஏதேனும் விபரங்கள் :————.

16. இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவாகவோ, தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால், விண்ணப்பித்தற்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பதாரர் பொதுச் சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை.

.........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

11–131—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

---

## இலங்கைப் பத்திரிகைப் பேரவை

### வெற்றிடங்கள்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

விண்ணப்பங்கள், இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு, "பத்திரிகை ஆணையாளர், இலங்கைப் பத்திரிகைப் பேரவை, 46 கிறேகறீஸ் றோட், கொழும்பு 7" எனும் முகவரிக்கு 13.11.73 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பதிவு அஞ்சல் மூலம் அனுப்படுதல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்படும் கடித உறையின் இடது பக்க மூலையில் "உதவிப் பத்திரிகை ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதப் படல் வேண்டும்

விண்ணப்பங்கள் பெறப்பட்டமை அறிவிக்கப்படமாட்டாது.

பதவிகள் நிரந்தரமானவை. நியமனம் பெறுவோர் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்த நிலையில் பணிபுரிவர். அவர்கள் ஊழியர் ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுதொகை கொடுப்பனவு செய்வர்.

விண்ணப்பிக்கும் பதவிகளுக்கென விதிக்கப்பட்ட தகைமைகளுக்குச் சான்றாக விண்ணப்பதாரர் சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும் :—

(1) பிறப்புச் சான்றிதழ்.
(2) அதி உயர் கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.
(3) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் மூன்று.

(அரசசேவைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர் குணச்சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. ஆனால் அவ் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களூடாக அவர்களின் விதப்புரையுடன் அனுப்பப்படல் வேண்டும்).

இவ் வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) முற்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவையில் பதவிகளுக்காய நியமனங்களுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

கே. ஜே. சி. விஜயவர்த்தன,
பத்திரிகை ஆணையாளர்.

ஸ்ரீலங்கா பத்திரிகைப் பேரவை,
46, கிறேகறீஸ் றோட்,
கொழும்பு 7.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில்...................... பதவிக்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரரின் பெயர் :————.
   (1) முதற் பெயர் :————.
   (2) இதர பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. வயது :————.
   (1) 31.10.73 இல் வயது :————.
   (2) பிறந்த தேதி (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :————.

4. தேசிய இனம் :————.

5. திருமணமானவரா, திருமணமாகாதவரா :————.

6. கல்வித் தகைமைகள் அல்லது தொழிநுட்பத் தகைமைகள் அல்லது இரண்டும் :————.

7. பாடசாலையிலிருந்து விலகியது தொட்டு ஆற்றிய தொழில் அல்லது பின்பற்றிய பயிற்சிநெறிகள் அல்லது இவ்விரண்டினதும் பற்றிய விபரங்கள் :————.

8. அரசின் கீழ் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் கீழ் முன்னர் சேவையாற்றியிருந்தால், அச் சேவையிலிருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக :————.

9. குற்றமெதற்காகவேனும், சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால், குற்றத்தின் தன்மை, விதிக்கப்பட்ட தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :————.

10. குணச்சான்றிதழ்கள் வழங்கியோரது பெயர்கள், முகவரிகள், பதவிப் பெயர்கள் என்பவற்றைத் தருக :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலடங்கியுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென அல்லது தவறானவையெனத் காணப்படுமிடத்து, அத்தகைய கண்டுபிடிப்பு தேர்வுக்கு முன்னரெனில் தகைமை இழப்பதற்கும், நியமனத்திற்குப் பின்னரெனில் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

**பதவிப் பெயர்.**—உதவிப் பத்திரிகை ஆணையாளர்.

**பதவிகள் எண்ணிக்கை.**—ஒன்று.

**சம்பள அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூ. 1,000—10×50—ரூ. 1,500 (திரட்டிய சம்பளம்)

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் வேலையனுபவம், ஆற்றல் என்பவற்றுக்கமைய, சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான தொரு சம்பள அளவில் அமர்த்துதல் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படலாம்.

**வயது.**—31.10.73 இல் 25-40 வருடங்கள். (அரச சேவையிலுள்ளோருக்கு அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் சேவையிலுள்ளோருக்கு மேல்வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடையதன்று).

**தகைமைகள்.**—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரியாகவிருப்பதுடன், அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் பதவிநிலை அலுவலராக ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

வழக்குரைஞர் 3 வருட அனுபவத்துடன்

அல்லது

வழக்கறிஞர் 5 வருட அனுபவத்துடன்

11–236—02.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 84

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய இரய விகிதங்கள்**

**01.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளப்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட இரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | ரு | ச |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் இரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடைவிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | .. | 5.10.73 | வெள்ளி | .. | 25.9.73 | செவ்வாய் | .. | ந.ப. 12.00 |
| | | 12.10.73 | வெள்ளி | .. | 3.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.10.73 | வெள்ளி | .. | 10.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 26.10.73 | வெள்ளி | .. | 17.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| நவெம்பர் | .. | 2.11.73 | வெள்ளி | .. | 24.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.11.73 | வெள்ளி | .. | 31.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.11.73 | வெள்ளி | .. | 7.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.11.73 | வெள்ளி | .. | 14.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.11.73 | வெள்ளி | .. | 21.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 7.12.73 | வெள்ளி | .. | 28.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.12.73 | வெள்ளி | .. | 5.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 21.12.73 | வெள்ளி | .. | 12.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 28.12.73 | வெள்ளி | .. | 19.12.73 | புதன் | .. | ந.ப. 12 00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆல் ஓகத்து மீ 18 ந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.